
# தீண்டாமையை ஒழித்தது யார்?

(வைக்கம் போராட்ட வரலாறு)

33



குடியரசு பதிப்பகம், ஈரோடு.

# தீண்டாமையை ஒழித்தது யார்?

(வைக்கம் போராட்ட வரலாறு)

பெரியார் ஈ.வெ.ரா

குடிஅரசு பதிப்பகம், ஈரோடு

1968

முதற்பதிப்பு 1961
இரண்டாம் பதிப்பு 1968

விலை 25 காசு

தமிழன் அச்சகம், ஈரோடு.

# பதிப்புரை

தந்தை பெரியார் அவர்கள் கடந்த நாற்பது ஆண்டு களாக பொதுவாழ்க்கையில் ஈடுபட்டு மக்களுக்குப் பகுத்தறிவையூட்டி, அவர்களைக் காட்டுமிராண்டித் தனத்திலிருந்து மீட்டு உண்மை மனிதர்களாக ஆக்கும் அரிய பணிக்காக அவர்கள் ஆற்றிய அரும்பெரும் கருத்துரைகள் அறிவுப் பொக்கிஷங்களாகும்.

தமிழ்நாட்டின் தமிழர் இன எழுச்சி வரலாற்றை அறியவேண்டுமானால், அந்த இயக்கத்திற்கு வித்தூன்றிய முதல்வராம் நம் தந்தை அவர்களின் பேச்சு எழுத்து தவிர வேறு வழி இல்லை. நாடு இதனை நன்கு அறியும்.

கடந்தகால உண்மை வரலாற்றை அறிய தற்போதைய "வரலாற்று நூல்"களின் மூலம் முடியாது. பத்திரிகைத் துறையைப் போலவே அவையும்கூட பார்ப்பன "மேல் ஜாதிக்காரர்"களின் ஆதிக்கத்தில் இருப்பதால் உண்மையைத் தலைகீழாக மாற்றியுள்ள சம்பவக் கோர்வையைத்தான் அவைகளில் காணுகிறோம்.

காந்தியும், காங்கிரசும்தான் தீண்டாமையை ஒழித்தமைக்குக் காரணம் என்று சொல்லப்படுவது ஒரு மாபெரும் இமாலயப் புரட்டாகும். உண்மை நிலை என்ன என்பதை தந்தை பெரியார் அவர்களது பேச்சு எழுத்து மூலமே நாம் அறியவாய்ப்புகள் உண்டு. காந்தியார் தீண்டாமையை ஒழிக்க முயற்சி பண்ணவில்லை; மாறாக அதற்கு அரண் அமைத்தார். அவர் செய்த மாபெரும் "புரட்சி" எல்லாம் "பறையனை" "ஹரிஜன்" ஆக்கினாரே தவிர, "பறையனை" மனித

க்கவில்லை. பார்ப்பானை "பிராமணன்" ஆனது போல் பறையன் "ஹரிஜன்" ஆக்கப்பட்டது தவிர, அதற்கு அடிப்படையான ஜாதி ஒழிக்கப்பட ஒரு போதும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. இது பலருக்குத் தெரியாது. "மகான் காட்டிய வழி," என்று பேசிப் பேசி வர்ணாச்சிரம தர்மத்தின் காவலராக காந்தியார் இருந்தார் என்ற உண்மையை அவர்கள் மறைத்து விடுகிறார்கள். இதை இரு பெரும் சிந்தனையாளர் களான தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கார் ஆகிய வர்கள் மூலமே அறியக்கூடும். 10—8—57ல் திராவிடர் கழக மத்தியக் கமிட்டியில் தந்தை பெரியார் அவர்கள் "காந்தி கண்டனத் தீர்மானம்" கொண்டு வந்தது. வழக்கம்போல் பலருக்கு அதிர்ச்சியைத் தந்தது. ஆனால் அய்யா அவர்கள் காட்டிய ஆணித்தரமான காரணங்கள் அந்த அதிர்ச்சிக்கு, சிகிச்சை தந்தன. "காந்தியார் படத்தை எரிப்பது ஏன் ?" என்று நாடெங்கும் விளக் கினார்கள். வடநாட்டிலும் தமது சுற்றுப்பயணத்தில் காந்தியின் வர்ணாச்சிரம தர்மத்தைக் காப்பாற்றும் கருத்துக்களை விளக்கி மக்கள் உணரும்படி உண்மை விளக்கம் தந்தார் தந்தை பெரியார்.

"தீண்டாமை ஒழிக்கப்பட்டது" என்பது இந்திய அரசியல் சட்ட புத்தகத்தில் 17வது விதியாகவே காட்சியளிக்குமே தவிர, அதற்கு அஸ்திவாரம் இட்டவர் வைக்கம் களத்தில் போராடிய தந்தை பெரியார் அவர்கள் தாம். காந்தியார் அப்போது எவ்விதம் நடந்து கொண்டார். இவை இன்றைய இளைஞர்கள் அறிய வேண்டும். கடந்தகால வரலாற்றின் முக்கிய பகுதி தான் இப்பேச்சு.

காந்தியார், ஜாதியில் "வர்ணாஸ்ரம தர்மத்தில்" எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கையும், பற்றும், பக்தியும் உடையவராக இருந்தார் என்பது இதோ காட்டப்பட்

உள்ள அவரது எழுத்துக்களைப் பார்த்தாலே தெரியும். படியுங்கள் ஒரு முறை அல்ல பலமுறை.

1. "இந்து சமூகமானது பலகாலம் நீடித்திருப்பதற்கு காரணம் அது சாதி அடிப்படையில் அமைந்து இருப்பதே என நான் நம்புகிறேன்."

2. "சுயராஜ்யத்தின் வித்தானது சாதிமுறையிலிருந்து காணப்படுதல் வேண்டும் பலவிதமான சாதி முறைகள் பலபிரிவுகளின் ராணுவமுறையை ஒப்பாகும் ஒவ்வொரு பிரிவும் எல்லாவற்றின் நல்லனவற்றிற்காக வேலை செய்கிறது."

3. "சாதி முறையை உண்டாக்கக்கூடிய ஒரு சமூகம் மகத்தான அமைப்பு சக்தியை பெற்றிருக்கிறது என்றே சொல்லவேண்டும்."

4. "ஆரம்பப் படிப்பை பரப்ப சாதி ஒரு வசதியான அமைப்பாகும் ஒவ்வொரு சாதியும் அதனுடைய வகுப்பாரின் பிள்ளைகளைப் படிக்க வைக்கும் பொறுப்பு எடுத்துக் கொள்ளக்கூடும், சாதிக்கு ஒரு அரசியல் அடிப்படையும் உண்டு. சாதியானது சில முறைகளால் நீதிபதியாக தேர்ந்தெடுத்து அவர்கள் அச்சாதியினருக்குள் உண்டாகும் பூசல் களைத் தீர்த்துவைக்க உதவும். சாதியின் உதவி யால் ஒவ்வொரு சாதியும் ஒரு படையைத் திரட்டு வது சுலபமானதாகும்."

5. "சமபந்தி போஜனமும், கலப்பு மணமும் சமூகத் தின் ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கு தேவை யில்லை என நான் நம்புகிறேன். சமபந்தி போஜ னம் நட்பை வளர்க்கிறது என்பது அனுபவத்திற்கு மாரானதாகும். இது உண்மையாக இருக்குமா

னால் ஐரோப்பாவில் ஒரு சண்டைகூட நிகழ்ந் திருக்காது. மலம் கழிப்பதைப் போலவே உண் பது என்பதும் ஒரு மட்டமான செய்கையாகும். மலங்கழித்த உடன் நமக்கு அமைதி ஏற்படுகிறது. ஆனால் சாப்பிட்ட உடன் நமக்கு தொந்தரவு ஏற்படுகிறது என்பதே இந்த இரண்டுக்கும் உள்ள ஒரே வேறுபாடாகும். மலங்கழிப்பதை நாம் எப்படி ஒதுங்கி தனித்து செய்கிறோமோ அதே போல சாப்பிடுவதும் ஒதுங்கி தனித்தே நடத்தப் படவேண்டும்.''

6. இந்தியாவில் சகோதரர் குழந்தைகள் ஒன்றை ஒன்று திருமணம் செய்து கொள்வதில்லை அத னால் அவர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்காமலா இருந்து விடுகிறார்கள் ? வைஷ்ணவரிடையே பல தாய்மார்கள் மற்ற குடும்பத்தாருடன் கூடிசாப்பிடு வதோ அல்லது பொதுவான ஒரு தண்ணீர் பானை யிலிருந்து தண்ணீர் குடிப்பதோ கூட இல்லாது அந்த அளவுக்கு வைதீக உணர்ச்சி உள்ளவர்க ளாக இருக்கிறார்கள். அதனால் அவர்கள் ஒருவருக் கொருவர் அன்பில்லாமலா இருக்கிறார்கள். சமபந்தி போஜனத்தையும், கலப்பு மணத்தையும் சாதி அனுமதிப்பதில்லை என்பதால் அது கேடானது என்று சொல்லிவிட முடியாது.''

7. "கட்டுப்பாட்டிற்கு (Control) மற்றொரு பெயர் தான் சாதி என்பது அளவு மீறி அனுபவிப்பதற்கு ஒரு எல்லையை உண்டாக்குவதுதான் சாதி. வசதி களை அனுபவிக்கும் முயற்சியில் தனது எல்லையை தாண்ட சாதி ஒருபோதும் அனுமதிப் பதில்லை. சமபந்தி போஜனம், கலப்புமணம் ஆகியவற்றிற்கு சாதி முறை தடை போடுவதின் முக்கியமான கருத்து இதுதான்.''

8. "சாதிமுறையை ஒழித்து மேற்கு ஐரோப்பிய சமுதாய முறையை கடைபிடிப்பதற்கு சாதி முறையின் உயிர் நிலையான பரம்பரை சாதித் தொழிலை கைவிட்டாக வேண்டும். பரம்பரை சாதித்தொழில் என்பது எப்போதும் கடைபிடிக்க வேண்டிய ஒரு கொள்கையாகும். அதை மாற்று வதின்மூலம் குழப்பம்தான் உண்டாகும் என் வாழ்வில் ஒரு பிராமணனை, பிராமணன் என்று அழைக்க முடியாவிட்டால் அந்த பிராமணனால் எனக்கு எந்த விதமான பயனும் இல்லையே. ஒவ்வொரு நாளும் ஒரு பிராமணன் சூத்திரனாக வும், ஒரு சூத்திரன் பிராமணனாகவும் மாற்றப் பட்டால் அது பெரும் குழப்பமாகத்தானே இருக் கும்."

9. "சாதிமுறை சமுதாயத்தின் இயற்கையான ஒரு அமைப்பாகும். இந்தியாவில் அதற்கு ஒரு மதப் பூச்சு கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற நாடுகள் சாதி முறையின் பயனை சரியானபடி புரிந்து கொள்ளாதக் காரணத்தால் அந்த நாடுகள் இந்தியா அடைந்த அளவுக்கு சாதியால் பல நன்மைகள் அடைய முடியவில்லை."

மேற்கூறியவைகளே என்னுடைய கருத்து களாக இருக்கிறமையால் சாதியை ஒழிக்க வேண்டும் என்பவர்களை நான் எதிர்க்கிறவனாக இருக்கிறேன்.

(இவை 1921-22ல் குஜராத்தி பத்திரிகையான நவ ஜீவனில் குஜராத்தி மொழியில் காந்தியாரால் எழுதப் பட்டக் கட்டுரையின் மொழிபெயர்ப்பாகும்.)

(1) பிறப்பை அடிப்படையாகக்கொண்ட வர்ணாசிரம பிரிவுகளில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு.

(2) வர்ணம் என்பது பிறப்பதற்கு முன்னாலேயே மனிதனுடைய தொழிலை நிர்ணயிப்பதாகும்.

(3) வர்ணாசிரம முறையில் எந்த மனிதனுக்கும் அவன் விரும்பும் தொழிலை தேர்ந்தெடுத்துக்கொள்ள சுதந்தரம் கிடையாது. வம்ச பரம்பரை அடிப் படையில் அவனுடைய தொழில் நிர்ணயிக்கப் படுகிறது.

(வர்ணவாயஸ்தா என்ற குஜராத்தி நூலிலிருந்து எடுக்கப்பட்டது)

(காந்தியும் காங்கிரசும் தீண்டாதாருக்கு செய்ததென்ன என்ற டாக்டர் அம்பேத்கார் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தில் 275–276ம் பக்கங்களிலிருந்து எடுத்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.)


"தீண்டாத" மக்களுக்கு காந்தியார் செய்த கொடுமையைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் தாழ்த்தப் பட்ட மக்களின் தனிப்பெரும் தலைவராக விளங்கிய டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எழுதியுள்ள **What Congress and Gandhi have done to the untouchables** என்ற நூலைப் படித்தால் தெளிவாக விளங்கும். அதில் "காந்தி, ஜாக்கிரதை" (Beware of the Gandhi) என்ற தலைப்பில் காந்தியாரைப்பற்றி தாழ்த்தப்பட்ட மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றே எழுதியுள்ளார் என்றால் அதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

வடநாட்டில் டாக்டர் அம்பேத்காரும், தென்னாட்டில் தந்தை பெரியாரும்தான் இத்தேசியப் புரட்டர்களின் திரையைக் கிழித்தவர்கள் என்பதும், இதன் மூலம் விளங்கும்.

உண்மை கசப்பானதுதான்! அதற்காக உண்மையை வெறுக்கமுடியுமா?

தென்னார்க்காடு மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் திரு கு. கிருஷ்ணசாமி M. C., அவர்கள் கழகப் பிரச்சாரம் தீவிரப்படுத்த வேண்டுமென்ற ஆர்வத்துடன் இம்மாதிரி பயனுள்ள பணிகளில் ஈடுபட்டிருப்பதற்காக தமிழர்கள் அனைவரும் பாராட்டி, அறிய கருத்துரை தொகுப்பான இந்த நூலை வரவேற்பார்கள் என்பது திண்ணம்.

**கி. வீரமணி.**



தந்தை பெரியார்

# 'தீண்டாமையை ஒழித்தது யார்?'

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது தந்தை பெரியார் அவர்கள் மார்த்தாண்டம், இரணியல் ஆகிய ஊர்களில் ஆற்றிய சொற்பொழிவுகளின் சுருக்கம் :—

*பேரன்புமிக்க தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே!*

கன்னியாகுமரி மாவட்டமாகிய உங்கள் மாவட்டத்திற்கு வரவேண்டுமென பல நாட்களாக தோழர்கள் அழைத்துக் கொண்டேயிருந்தனர். நானும் பல ஜில்லாக்களின் வரவேற்பு நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு உங்கள் பகுதிக்கு வந்தேன் "இதுவரையில் யாருக்குமே இல்லாத அளவு உங்கள் கூட்டத்திற்கு" என்று பல பேர் என்னிடம் வந்து சொல்லும் அளவு அவ்வளவு சிறப்பான முறையில் வரவேற்பு ஒவ்வொரு ஊரிலும் பத்தாயிரக்கணக்கில் கூடி எங்கள் பேச்சைக் கேட்கிறார்கள்.

இந்த ஊருக்கு (மார்த்தாண்டம்) சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு வந்திருக்கிறேன். 20 ஆண்டுகளுக்கு முன்பும் ஒரு தடவை வந்திருக்கிறேன். அப்போதெல்லாம் நீங்கள் வேறுநாடு, வேறு ஆட்சியின்கீழ் இருந்தீர்கள். ஆனாலும்கூட நாம் அனைவரும் ஒரே இனம் ஒரே சாதி அதாவது "சூத்திரர்கள்"—திராவிடர்களாகிய நாம் எல்லோருக்கும் பொது இழிவு ஒன்று, அதுதான் இந்த சூத்திரப்பட்டம் என்ற நிலையில்தான் இருந்தோம்.

**நாம் ஓரினத்தார் ஒரு குடும்பத்தினர்**

இப்போது நாம் ஒரே நாட்டார் ஆகிவிட்டோம் அதாவது நாம் தமிழர்கள்—தமிழ் நாட்டவர்கள் நமக்குள் அதிகமான ஒற்றுமை சம்பந்தம் ஏற்பட்டு ஒரு குடும்பத்தினர் போல் ஆகிவிட்டோம்! நாமெல்லோரும் ஒரே நாட்டார் ஆகிவிட்டது மாத்திரமல்லாமல் ஒரே சாதியானதால் ஒரே இலட்சியத்திற்குப் பாடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**நமது நீண்டகாலப் போராட்டம்**

என்னைப் பொறுத்தவரை இன்றைக்கு சுமார் 35 வருடங்களுக்கு முன்பே நம் சாதிக்கு உள்ள இழிவுகளை—தடைகளை நீக்க வைக்கத்தில் போராட்டம் நடத்தி அதில் நான் தலைமை வகித்துத் தெருவில் நம்மில் பெருவாரியான மக்கள் நடப்பதற்கும், ரோடில் நடந்து செல்வதற்கும் கூடாதபடி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் இருந்து வந்த தடையை ஒழித்துக்கட்டி உரிமைகளைப் பெற்றோம்; அதெல்லாம் தெரியவேண்டுமானால் சுமார் 35 வருடத்துக்கு முந்தைய சங்கதியானபடியால் இன்றைக்கு 45-50 வயதானவர்களாக இருக்கவேண்டும். அதற்குக் குறைந்த இந்தக்காலத்து இளைஞர்களுக்கு அதெல்லாம் தெரியாது. அந்தக் கிளர்ச்சிகள் இல்லாதிருந்தால் இன்று இந்த நாட்டிலேயே பெரும்பாலான நம்மவர்கள் பல தெருக்களில் நடக்கக்கூட உரிமையற்றவர்களாக இருப்போம்.

**ஜஸ்டிஸ் கட்சியால் விளைந்த நன்மை**

அப்போது இந்த நாட்டில் நிலைமை மிகமிக மோசமானதாக இருந்தது. இது ஒரே பார்ப்பன வைதீக வர்ணாசிரம ஆதிக்க ஆட்சியாக இருந்தது. எங்கள் நாட்டில் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம்

தோன்றிய (ஜஸ்டிஸ் கட்சி என்ற அந்த இயக்கம் நடத்திய பத்திரிகைப் பெயரை வைத்து அழைத்தார்கள்) பிறகுதான் அப்போது இருந்த பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி பார்ப்பனரல்லாத மக்களுக்கு சில உரிமைகள் பெறப்பட்டன

**பார்ப்பனரின் பலத்த எதிர்ப்பு**

பார்ப்பனர்கள் பிராமண சமாஜம், பிராமண மகா சபை என்றெல்லாம் வைத்து வெளிப்படையாக நாம் பெற்ற எல்லா உரிமைகளையும் எதிர்த்து பலவற்றை ஒழித்துக்கட்டி விட்டார்கள். பார்ப்பனன் தன்னை மேல்சாதி என்றும் தான் பிராமணன் என்றும் அழைத்துக் கொள்வதிலும் நாமும் அவனை பிராமணன் என்று சொல்வதிலும் அவனுக்குப் பெருமையுண்டு. ஆனால் நம்மை அவன் சூத்திரன் என்று அழைப்பதிலும் சாஸ்திரமும் சட்டமும் நம்மை சூத்திரர்கள் என்றே குறித்து வைத்துள்ளதிலும் நமக்கு எவ்வளவு இழிவும் வாழ்வுக் கேடும் முன்னேற்றத் தடையும் இருக்கிறது. நாம் திராவிடன் அல்லது தமிழன் என்ற பெயரை வைத்துக் கொள்ளாமல் வேறு பெயரை வைத்துக்கொள்ள வேண்டுமென்றால் சூத்திரர் கழகம் என்றுதான் தமிழர் வைத்துக்கொள்ள வேண்டும்.

**திராவிடர் கழகத் தோற்றம்**

அதனால்தான் நம்மை குறிப்புக்காட்டுவதற்கு திராவிடர் என்ற இனப்பெயரை வைத்து திராவிடர் கழகம் என்று தென் இந்தியர் கட்சி. ஜஸ்டிஸ் கட்சி என்பதற்குப் பதிலாகப் பெயர் மாற்றினோம்.

**கிளர்ச்சியின் பயன்**

பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்று அழைக்கப்பட்ட ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் முயற்சியாலேயே

1919, 1920-ம வருடங்களில் நடந்த கிளர்ச்சிகளால் எங்கள் நாட்டிலே ஏன் தெலுங்கு கன்னட மலையாள நாட்டிலே வீதியில் நடக்கிற உரிமை வந்து விட்டது. இப்படி வீதியில் எல்லோரும் நடக்கலாம், எல்லா ரோடு களிலும் யார் வேண்டுமானாலும் நடக்கலாம். என்ற நிலைமையை அப்போது அதிகாரத்தின் மூலம் அமுலுக்குக் கொண்டுவந்து விட்டார்கள்.

பார்ப்பனர்கள் தண்ணீர் மொண்டு உபயோகப் படுத்துகிற குளத்திலேயும் கிணற்றிலேயும் மற்ற தாழ்ந்த சாதிக்காரர்கள் எனப்படுகிற நாமும் தண்ணீர் எடுக்கலாம் உபயோகப்படுத்தலாம் என்று அப்போதே ஜஸ்டிஸ் கட்சியினர் சட்டம் செய்தார்கள்.

**காந்தி சீடர்கள் பேசும் புரட்டு**

இதெல்லாம் காந்திக்கு முன்பே நடந்த காரியங்க ளாகும். காங்கிரசும் காந்தியும் வந்துதான் இந்தக் காரியங்கள் நடந்தன என்பதெல்லாம் புரட்டும் பித்த லாட்டமுமாகும்.

**ஸ்தலஸ்தாபனங்களில் சமத்துவம்**

அதுமாத்திரமல்ல எல்லாசாதிக்காரனும் பஞ்சா யத்துப்போர்டிற்கு முனிசிபாலிட்டிக்கு தாலூகா ஜில்லா போர்டுகளுக்கு சட்டசபைக்குப் போகலாம். நியமிக்க வேண்டும் என்றுகூடத் திட்டம் காந்தி வருவதற்கு முன்பே ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் செய்து விட்டனர். பார்ப்பானும் சட்டசபைக்கு நுழையலாம் பறையனும் போகலாம் என்பதெல்லாம் காந்தியால் ஆன காரியம் அல்ல. அதற்கு முன்பே பறையர் சக்கிலிகள் பள்ளர் கள் என்பவர்கள் சட்டசபையில் இருந்தார்கள் என் பதை நீங்கள் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

## காந்தியின் தனிப்படுத்தும் திட்டம்

"குளத்திலேயும், கிணற்றிலேயும் பார்ப்பானும், "பறையனும்" "சூத்திரனும்" ஒன்றாகத் தண்ணீர் எடுக்கக்கூடாது; கோயிலுக்குள் போகக்கூடாது மேல் ஜாதிக்காரனுக்குத் தனிக்குளம் கிணறு தனிக்கோவில் மற்ற சாதிக்காரனுக்கு தனிக்குளம் கிணறு கோவில்கள் கட்டித்தரவேண்டும்" என்பதுதான் காந்தியின் திட்டம். எனக்குத் தெரியும் யாராவது இல்லை என்று சொல்லட்டுமே பார்ப்போம். சும்மா இன்றைக்குச் சொல்வார்கள் காந்தி மகான் காட்டியவழி மகாத்மாவின் சேவை என்றெல்லாம். அது வெறும் புரட்டு.

நான் தமிழ்நாடு காங்கிரசு கமிட்டிக்குக் காரியதரிசியாக, தலைவனாக இருந்தபோதுதான் ரூ. 48,000 (நாற்பத்தெட்டாயிரம் ரூபாய்) தமிழ்நாடு காங்கிரசு கமிட்டிக்கு கிராண்ட் அனுப்பினார்கள் எதற்கு? "பறையன், சக்கிலி, பள்ளனுக்கு" வேறு பள்ளிக்கூடம் பறையனுக்கு வேறு கோயில் கட்டிக்கொடு, மற்ற சாதியானுக்கு மேல்சாதிக்காரனுக்கு என்று இருப்பதில் போய் ரகளை செய்யக்கூடாது என்று.

## சமத்துவம் அளித்தவர் ஜஸ்டிஸ் கட்சியினரே

ஆனால் அந்தக் காலத்திலேயே ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் சட்டம் செய்துவிட்டார்கள் ஒன்றாகப் படிக்கணும் படிக்கிறநிலே சாதி வித்தியாசம் காட்டக் கூடாது என்று. இன்றுங்கூட அந்தச் சட்டப்படிக்கு எல்லாப் பள்ளிக்கூடத்திலும், அமுல் நடக்கிறது. 'பறையர்கள்' பஞ்சமர்கள் எனப்படும் சாதிகளிலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கை உள்ள சில மாணவர்களைச் சேர்த்துக்கொண்டே ஆகவேண்டும் இல்லாவிட்டால் சர்க்காரின் கிராண்ட் அவைகளுக்குக் கிடைக்காது. என்று திட்டம் செய்துவிட்டார்கள்.

கல்வி இன்ஸ்பெக்டர் வரும்போது 'கீழ்சாதிப் பையன்கள் இல்லையா ?' என்பார். இல்லை 'யாரும் வரவேயில்லை' என்றால், 'இல்லாவிட்டால் போய்ச் சேர்த்துக்கொண்டு வா' என்பார்.

## நாராயண குருவின் தொண்டின் பலன்

அப்படி எங்கள் நாட்டிலே ஏராளமாக நடந்து கொண்டிருந்த நேரத்திலே உங்கள் நாட்டிலே கொடுமை கீழ்சாதியான் மேல்சாதியான் கண்ணில் தென்படக் கூடாது, அவனின் நிழல்கூட மேல்சாதிக்காரர்களின் மேல் படக்கூடாது என்ற நிலைமை அல்லவா இருந்தது! மற்றும், அவன் தன்னை இன்னான் என்று காட்டிக் கொள்ள மறைவிலிருந்தே ஒருவித சத்தம்போட வேண்டும் என்றும் திட்டம் இருந்தது 'நாராயண குருசாமி அவர்களின் போற்றத்தகுந்த தொண்டு காரண மாகத்தான் ஓரளவு கீழ்சாதி மக்கள் உணர்வுபெற்று வைக்கம் கிளர்ச்சி நடந்து இதற்குப் பரிகாரம் கிடைத்து நிலைமை மாறியது என்று சொல்லலாம் இதெல்லாம் கூட இன்றைக்கு இருக்கும் சிறு பிள்ளைகளுக்குத் தெரியாது. 40, 45 வயதானவர்களுக்குத்தான் தெரியும்.

## வைக்கம் போராட்டம்

வைக்கத்திலே நாங்கள் செய்ததும் அதனால் நாங்கள் பலதடவை சிறை சென்றதும், அடிபட்டு அவமானம் அடைந்ததும் இக்கொடுமைகளை நீக்கத்தானே?

அந்தக்காலத்தில் ஜெயிலில் வகுப்புகள் கிடையாது ஒரே 'சி' வகுப்புதான் ஆகவே அப்போது சாதிக் கொடுமை ஒழிய நாம் எப்படிப்பட்டக் கொடுமைகளை அனுபவித்து இருந்தோம் என்பதும் இப்போது உள்ள உங்களில் பலருக்குத்தெரியாது. இது எப்படி மாறியது?

இப்போது நம் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை யெல்லாம் நீங்கள் யோசித்தால்தான் இப்போது நாங்கள் மெதுவாக இந்த சாதி ஒழிப்பு விஷயத்தில் போகிறோம் இன்னும் வேகமாகப் போகவேண்டும் என்று உங்க ளுக்குத் தெரியும்.

**போராட்டம் தோன்றக் காரணம்**

வைக்கத்திலே போராட்டம் ஆரம்பமானதே ஒரு சிறு நிகழ்ச்சியிலேயிருந்துதான்.

தோழர் மாதவன் என்ற பி. ஏ., பி. எல். படித்த ஒரு வக்கீல் ஒரு வழக்குக்காக ஆஜராகப் போனார் வழக்கு விசாரணைக்கான கோர்ட் இடம் ராஜாவுடைய கொட்டாரத்தில் (அரண்மனையில்)ஒரு இடம் இராஜா வின் பிறந்த நாள் விழாவிற்கு அந்த இராஜாவுடைய கொட்டாரத்தில் (அரண்மனையில்)எல்லா பாகத்திலும் பந்தல் போடப்பட்டதில் கோர்ட் நடக்கும் இடமும் பந்தலுக்குள் ஆகிவிட்டது. இந்த மாதவன் வக்கீல் ஒரு கேசில் ஆஜராக அங்கே போகவேண்டிய அவசியம் வந்தது. இராஜாவின் பிறந்தநாள் கொண்டாட்டத் திற்காக முறை ஜெபம் ஆரம்பமாயிற்று. அங்கே இந்த வக்கீல் ஈழவ ('நாடார்') சமுதாயத்தைச் சேர்ந்தவரானத லால் அங்கே போகக்கூடாது என்று தடுத்தார்கள்.

**நமது சீர்திருத்தத் திட்டங்கள்**

அந்த நேரம் நான் தமிழ் நாட்டிலே தீண்டாமை விலக்கு என்பதில் தீவிரமாக இருந்து பிரசாரம்செய்து கொண்டிருந்த நேரம்! கலப்பு மணம், சமபந்தி போஜ னம் எல்லோரும் பள்ளிக்கூடத்தில் படிக்கவேண்டும்— என்பன போன்ற கருத்துக்களில் தீவிர நம்பிக்கைக் கொண்டு ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும் பிரசாரம் செய்துக்

கொண்டிருந்தார்கள். இதைப்பார்த்துத்தான் காந்தியும் அதை நிர்மாணத் திட்டத்தில் சேர்த்துக்கொண்டார். அந்தக்காலத்தில் பார்ப்பனர்களை ஜஸ்டிஸ்கட்சிக்காரர் நல்லபடி வெளியாக்கி வெளுத்து வாங்குவார்கள் ரோடிலே பார்ப்பனர்கள் அப்போது தைரியமாகத் தனியே நடக்கக்கூட முடியாது. டி. எம். நாயரும், தியாகராயரும், ஜஸ்டிஸ் கட்சியும் ஜனங்களிடத்தில் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து பார்ப்பனரல்லாதாரின் ஆதரவைத் திரட்டி ஆட்சியைப்பெற்று ஆண்டுகொண்டிருந்தது பார்ப்பனர்கள் அவர்களைக் கண்டு நடுங்குவார்களே? பார்ப்பனர்களுக்கு மேடையே இல்லாமல் போனகாலம் அது!

## பார்ப்பனர் குள்ளநரித் தந்திரம்

அப்போதெல்லாம் பார்ப்பனர்கள் எங்களுக்கு ஆட்சி வேண்டாம், அதிகாரம் வேண்டாம், சட்டசபை வேண்டாம் என்று குள்ளநரித் தந்திரம் செய்து மக்களை வசப்படுத்த சதிசெய்துக்கொண்டு இருந்த காலம். அந்தக்காலத்தில்தான் ஜஸ்டிஸ் கட்சிக்கு இருந்த செல்வாக்கைக்கண்டு வஞ்சக மனத்தோடு பித்தலாட்டக் கருத்துக்கொண்ட "தீண்டாமை விலக்கு" என்பதைத் தங்கள் திட்டத்தில் காந்தி சேர்த்தார்.

## காங்கிரசில் சேர்ந்தது ஏன்?

அந்தக் காலத்தில் நான் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கு மிகவும் வேண்டியவனாகத்தான் இருந்தேன் என்னை நிரம்பவும் மதிப்பார்கள் காரணம் நான் எல்லாப் பதவிகளிலும் இருந்து வந்தவன் திரு. இராஜகோபாலாச்சாரியாரே வந்து சமுதாய சீர்திருத்தம்தான் நமக்கு வேண்டும் அது காந்தியால்தான் முடியும் என்று சொல்லி என்னை காந்திக்கு சிஷ்யன் ஆக்கினார் நானும்

சேர்மேன் பதவியை இராஜிநாமாக் கொடுத்து வெளி யேறி காங்கிரசில் சேர்க்கப்பட்டுவிட்டேன். சென்ற பிறகு தமிழன் ஒருவனுக்காவது அதுவரை கிடைத் திருக்காத த. நா. காங்கிரஸ் கமிட்டி செயலாளர் தலைவர் இடத்தில் உட்காரவைத்தார்கள்.

ஏனென்றால் திரு. வி. க. சாதாரணமாக ஒரு பள்ளிக்கூட வாத்தியாராக இருந்துவந்தவர். டாக்டர் வரதராஜலு அவர்கள் பிரபஞ்ச மித்திரன் வாரப் பத்திரிகை நடத்தி வந்தார் என்றாலும் பார்ப்பனர்கள் அவரை அவ்வளவு நம்பமாட்டார்கள். திடீரென அவர் களை யாரும் மாற்றிவிடலாம் என்று அவர்களுக்குத் தெரியும். வ. உ. சிதம்பரனார் ஒருவர். அவர் பாவம் எல்லாவற்றையும் விட்டு நொடிந்துபோய் கஸ்தூரி ரங்க அய்யங்கார் தயவில் இருந்தவர் அதனால் "சிறிது வசதி உள்ளவன் பெரிய வியாபாரி பல பதவிகளை விட்டு வந்தவன்" என்கிற முறையில் இராஜகோபாலாச்சாரி யார் என்னைத்தான் நம்பி எதற்கும் எனக்கு மதிப்புக் கொடுத்து முன்னே வைப்பார்.

**அறியாது பார்ப்பனர்க்கு இடம் கொடுத்தோம்.**

உண்மையாகவே நானும் அதை நம்பி அவரிடம் மிக்க விசுவாசமாக இருந்து பெரிய பிரச்சாரம் செய்து பார்ப்பனருக்கு நாங்கள் மேடை தேடிக்கொடுத்து விட்டோம்! அப்போதே நான் "நாம் தொட்டால் தீட்டுப்பட்டுவிடும் என்கிற சாமி நமக்கு எதற்கு? அதை எடுத்து ரோடுக்கு ஜல்லி போடணும்; அல்லது ஆற்றிலே தூக்கிப்போட்டு வேட்டித் துவைக்கப் போட ணும்" இப்படித்தான் பேசுவேன். டாக்டர் வரத ராஜலு, கல்யாணசுந்தரனார், சிதம்பரனார் நான் ஆகிய நால்வரில் பார்ப்பனர்கள் என்னைத்தான் முன்னே தள்ளுவார்கள்! என்னைப் பார்த்து பதவி வேட்டைக்

காரன் என்று எவரும் சொல்ல முடியாது என்பதால் பார்ப்பனர்களும் நான் என்ன சொன்னாலும் வாயை மூடிக்கொண்டுதான் இருப்பார்கள்.

**சமுதாயத்துறையில் அப்போதே கவலை.**

சாதி மதம் கடவுள் துறையில் இப்பொழுது சொல்லுவதெல்லாம் நான் அப்போதே சொல்லுவேன் நான் பேசி முடித்து வந்ததும் ஆச்சாரியார் சொல்லுவார் "நாய்க்கர் உங்களுடையது ரொம்ப" "Strongdose" என்று சொல்லுவார் நான் சொல்லுவேன் 'நீங்க என்னங்க இந்த மடப்பசங்களுக்கு Strong என்ன லேசு என்ன என்று சொல்லித் தப்பித்துக் கொள்வேன். அவரும் வேறுவழி இல்லாததால் சிரித்துக் கொள்ளு வார். அந்தமாதிரி முறையில் நாட்டை பார்ப்பனர் கைக்குப்போகும்படியான அளவுக்கு பக்குவப்படுத்தி விட்டோம்.

**வைக்கம் போர்க்களமாயிற்று.**

இந்த மாதவன் (வக்கீல்) சங்கதியை வைத்தே திருவனந்தபுரத்து ஈழவ சமுதாய தலைவர்கள் சத்தி யாக்கிரகம் ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவு செய்த னர். வக்கீல் மாதவன் டி. கே. மாதவன் கேரள காங் கிரஸ் கமிட்டித் தலைவர். கே. பி. கேசவமேனன் இவர்களோடு இன்னும் சிலரும் சேர்ந்து முடிவு செய்தார்கள். முறை ஜெபத்தன்று ஆரம்பிப்பது என்று முடிவு செய்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட் டார்கள். நான் அப்போது தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியின் தலைவராக இருக்கிறேன். எந்த ஊரில் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கலாமென்பதற்கு வைக்கத் தையேத் தேர்ந்தெடுத்தார்கள். ஏனென்றால் அந்த ஊரில்தான் ஊர்நடுவில் கோயிலும் அதன் 4 வாசலுக்கு

எதிரிலும் 4 நேர் வீதிகளும் கோயில் மதில்கள் சுற்றிலும் தெருக்கள் பிரகாரம் எல்லாமும் இருக்கும்.

**தீண்டாமைக் கொடுமை**

அந்த வீதிகளில் கீழ்சாதிக்காரர்களான அவர்ணஸ்தர்கள் எல்லோரும் அயித்தக்காரர்கள் எனப்படும் தீண்டாதாரும் நான்கு புறத்திலும் கோயில் வாசல்களுக்கு முன்னாலும் நடக்கக்கூடாது! மூன்றுஃபர்லாங் தூரத்திலேயேயும் 4ஃபர்லாங்கு தூரத்திலேயும் இருக்கிற ரோட்டில்கூட நடக்காமல் ஒரு மைல் தூரம் வேறு ரோட்டில் சுற்றிக்கொண்டுதான் எதிர் ரோட்டுக்குப் போகவேண்டும் அயித்தக்காரர் தீண்டப்படாதவர்களைப் போலவேத்தான் ஈழவர்கள், ஆசாரிகள், வணியர்கள், சேவாளிகள் முதலியோரும் அந்த ரோட்டில் நடந்து போகக்கூடாது.

இதே மாதிரித்தான் சுசீந்திரத்திலும் உள்ள கோயில் மற்றும் அந்த ராஜ்யத்தில் உள்ள மற்ற கோவில்கள் பக்கமும் அமைந்துள்ள தெருக்களிலும் நடக்க இவர்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது.

வைக்கத்தில் கோவிலுக்குப் பக்கமாக வாசலுக்கு எதிராக அமைந்த தெருக்களில்தான் எல்லா முக்கிய அஃபீசுகளும், கோர்ட், போலீஸ் ஸ்டேஷன் முதலியனவும் இருந்தன. ஏதாவது போலீஸ்காரர்களையோ இன்ஸ்பெக்டர்கள்ளையோ குமாஸ்தாக்களையோ மாற்றுவதானாலுங்கூட கீழ்சாதியார்களை அங்கு மாற்ற மாட்டார்கள். ஏனென்றால் அந்த போலீஸ் ஸ்டேஷன் கோர்ட்டுகள் இருக்கும் இடத்திற்குப் போக கீழ்சாதியார்களுக்கு அனுமதி கிடையாது என்பதால் முக்கியமான கடைகளும் அந்த வீதிகளில்தான் ஆனதால் கீழ்சாதிக் கூலிகள் அங்கு செல்ல முடியாது.

**போராட்டமும் கைதும்.**

சத்தியாக்கிரகம் ஆரம்பமானவுடன் வக்கீல் மாதவன் பாரிஸ்டர் கேசவமேனன் டி. கே. மாதவன் ஜார்ஜ் ஜோஸப் முதலியவர்களைப் போல் சுமார் 19 பேரை ராஜா அரஸ்ட் செய்யும்படி உத்தரவிட்டு அதன்படி அவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தினசரி ஒருவர் வீதம் கைது செய்து அவர்களை மாத்திரம் தனிப்பட்ட முறையில் ஸ்பெஷல் கைதிகளாக நடத்த உத்தரவிட்டார்கள். அப்போது இராஜாவிடம் மிஸ்டர் பிட் என்ற ஒரு வெள்ளைக்காரர் போலீஸ் அய். ஜி. யாக இருந்தார். அவர் இந்த சத்தியாக்கிரகத்தை வெகு சாமர்த்தியமாகவும் ரொம்பவும் ஜாக்கிரதையாகவும் சமாளித்தார். இந்த பத்தொன்பது பேரைப்பிடித்து உள்ளே போட்டுவிட்டவுடன் அடுத்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட யாரும் முன்வர ஆள் கிடைக்கவில்லை. அதோடு அதுவும் நின்றுவிடும் போலத் தோன்றியது. உடனே எனக்கு பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப்பும் கேசவமேனனும் சேர்ந்து கையெழுத்துப் போட்டு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்கள். நீங்கள் வந்துதான் இதற்கு உயிர் கொடுக்கணும் இல்லாவிட்டால் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை. அப்படி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுவதனால் எங்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை என்றாலும் பெரிய காரியம் கெட்டுப்போகுமே என்றுதான் கவலைப்படுகிறோம். உடனே நீங்கள் வந்து பொறுப்பு ஏற்கவேண்டும் என்று எழுதி அனுப்பினார்கள். எனக்கு ஏன் எழுதினார்கள் என்றால் தீண்டாமையைப்பற்றி பேசுவதில் நான் கெட்டிக்காரன், கிளர்ச்சியிலும் நான் கெட்டிக்காரன் என்று எனக்குப் பேர். நான் அப்போது சுற்றுப்பிரயாணத்தில் இருந்தேன்.

ஈரோட்டிற்கு எழுதப்பட்ட அந்தக் கடிதம் ரீ டைரக்ட் செய்யப்பட்டு மதுரை ஜில்லாவில் உள்ள பண்ணபுரம் என்ற ஒரு மலைப்பக்க கிராமத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவன் என்ற முறையில் நான் பேசிக் கொண்டிருந்தபோது என் கைக்குக் கிடைத்தது.

**இடர்ப்பயணம் போருக்கு !**

உடனே மீதி சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை எல்லாம் ஒத்திப்போட்டுவிட்டு நேரே ஈரோட்டுக்குப் போனேன். வீட்டுக்கு வந்தவுடன் வைக்கத்திற்குப் போய் சத்தியாக் கிரகத்தை நடத்துவதென்று மிக்க மகிழ்ச்சியோடு மூட்டைக் கட்டிவிட்டேன். திரு. ராஜகோபாலாச்சாரி யார் அவர்களுக்கும் நான் வரும் வரைத் தலைமைப் பதவி ஏற்றுக்கொள்ளும்படி ஒரு லெட்டர் எழுதிவிட்டு இந்த சந்தர்ப்பம் ஒரு நல்லவாய்ப்பு இதை விட்டால் இந்த மாதிரி அருமையான வேலைசெய்ய வேறு வாய்ப்புக்கிடைக்காது என்று எழுதி விட்டு 2 பேரைக் கூட்டிக்கொண்டு வைக்கத்திற்கு வந்தேன்.

**எதிர்பாராத வரவேற்பு**

வைக்கம் போராட்டத்துக்காக நான் வருகிறேன் என்ற விஷயம் தெரிந்துகொண்டு, போலீஸ் கமிஷனர் பிட். இன்னொரு அய்யர் (அவர் பெயர் இப்போது சரியாய் ஞாபகத்திற்கு வரவில்லை. திவான் பேஷ்கரர் சுப்ரமணிய அய்யர் என்று நினைக்கிறேன்) ஒரு தாசில் தார் எல்லோரும் என்னைப் படகிலிருந்து நான் இறங் குப்போதே வரவேற்றார்கள். மகாராஜா அவர்கள் எங்களை அவர்கள் சார்பில் வரவேற்று வேண்டிய எல்லா சவுகரியங்களையும் பண்ணித்தரச் சொன்னார் என்று சொல்லி எங்களை வரவேற்றார்கள். இது எனக்குப் பெரும் ஆச்சரியத்தைத் தந்தது என்றாலும்

ஏன் மகாராஜா அப்படி செய்தார் என்றால், அதற்கு 3-மாதத்திற்கு முன்பு இந்த இராஜா டெல்லிக்குப் போகிறதற்கு ஈரோடு வழியாக வந்து ஒரு நாள் ஈரோட்டிலே தங்கிவிட்டு அடுத்த நாள் டெல்லிக்கு இரயில் ஏறிப் போவது வழக்கம். அப்படி ஈரோட்டிலே தங்கும்போது அதற்குவேண்டிய வசதிகளையும், மகாராஜாவின் சிப்பந்திகள் தங்கும் இடம் எங்கள் சத்திரத்திலும், மகாராஜா எங்கள் பங்களாவிலும்தான் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். அப்படி 3 மாதத்திற்கு முன்வந்தபோது அவருடன் இந்த போலீஸ் அதிகாரி இன்னும் இராஜாவுக்கு உதவிக்குத் தேவையான எல்லா அதிகாரிகளும் வந்து போனதில் இவர்கள் ஈரோட்டில் என்னை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறவர்களாகவும் நானும் அவர்களை எங்கள் வீட்டிற்கு வந்தபோது சந்தித்துப் பேசியவர்களாகவும் இருந்திருக்கிறோம். இதனால் மகாராஜா சற்று மரியாதைக் காட்டினார்.

### எனது தீவிரப் பிரசாரம்

சத்தியாக்கிரகத்தை தொடர்ந்து நடத்திவந்த என்னை மகாராஜா சார்பில் இந்த பெரிய அதிகாரிகளே வரவேற்கிறார்கள் என்று கண்டதும் அப்பக்கத்திய பாமரமக்களுக்கு ஒரே குஷாலாக ஆகிவிட்டது. என்னை விருந்தினராக மகாராஜா கருதினாலுங்கூட நான் பல இடங்களிலும் சென்று பொதுக்கூட்டம்போட்டு சத்தியாக்கிரகத்தைப்பற்றிப் பேசினேன்; காரசாரமாகப் பேசினேன்! கீழ்சாதி மக்களான நாம் உள்ளே தெருவில் போவதால் தீட்டுப்பட்டுவிடும் செத்துப்போகும் என்று சொல்லும் வைக்கத்தப்பனை போட்டு வேட்டிதுவைக்கணும் என்றெல்லாம் கடுமையாகப் பேசினேன். சுற்று வட்டார மக்கள் ஆயிரக்கணக்கில் வைக்கம் வந்து கூடிவிட்டார்கள். அது இராஜாவுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. 5-6 நாள் வரை சும்மாதான்

இருந்தார் பலரும் போய் அவரிடத்தில் நான் பேசுவது குறித்து முறையிட்டார்கள். பிறகு இராஜாவினால் சும்மா இருக்கமுடியவில்லை.

## தடைச் சட்டத்தை மீறினோம்

இப்படி சுமார் 10 நாள் ஆனவுடனேயே ஒரு போலீசு(சூப்பிரண்ட்)அதிகாரி அவர் அய்யங்கார் அவர் முயற்சியால் பி. சி. 26 படி தடையுத்தரவு போட்டார். அந்த நாட்டிலே 26 என்பது. இப்போது இங்கே 144 தடையுத்தரவு போன்றது. நானும் சட்டம் மீறுவதைத் தவிர வேறு வழியில்லை என்று கண்டறிந்தேன். உடனே நான் சட்டத்தை மீறிப் பேசினேன். என்னுடன் (தற்போது காங்கிரசுக்காரராக இருக்கும்) திரு. அய்யாமுத்து அவர்களும் மற்றும் இருவரும் சட்டம் மீறினோம், எங்களைக் கைது செய்தார்கள். எல்லோருக்கும் ஒரு மாதம் வெறுங்காவல் போட்டார்கள்! என்னை அருவிக்குத்தி என்ற ஊரில் உள்ள ஜெயிலிலே வைத்தார்கள்! அதற்குப் பிறகு எனது முதல் மனைவியார் திரு. நாகம்மையாரும் பிறகு நான் வெளியே வந்தவுடன் எனது தங்கை எஸ். ஆர் கண்ணம்மாளும் மற்றும் சிலரும் வந்து நாடெல்லாம் சென்று பிரசாரம் செய்தார்கள் நான் விடுதலை ஆகிவந்து அதே மாதிரி மறுபடியும் திட்டம் போட்டேன்.

## கிளர்ச்சிக்குப் பெருத்த ஆதரவு

நான் வெளியே வருவதற்குள் இந்தக் கிளர்ச்சிக்கு ஏராளமான அளவில் ஆதரவு பெருகிவிட்டது மளமள வென்று ஆட்களும் வந்துசேர ஆரம்பித்தனர். ஏராள மான பேர்கள் பல பகுதியிலும் சென்று சுற்றுப்பயணம் செய்து தீவிரப் பிரச்சாரம் செய்தார்கள். எதிரிகளும் அடிதடி காலித்தனம், கலவரங்கள் முதலியவற்றில்

ஈடுபட்டு இதை எப்படியாவது ஒடுக்கிவிட வேண்டு மென்று பலவித முயற்சிகளும் செய்து பார்த்தார்கள்.

ஆனால் போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு பெருகிக்கொண்டேயிருந்தது! வெளிநாடுகளிலிருந்து மலையாளிகளும், சாதிக்கொடுமை என்பதைக் கண்டு மனம் துடித்து அதற்கு தங்கள் எதிர்ப்பையும் சாதிக் கொடுமைகளை யெதிர்த்து செய்யப்படும் போராட்டத் திற்குத் தங்கள் ஆதரவையும் காட்டும் வண்ணம் தினம் ரூ. 50, 60, 100-என்று மணியார்டர் அனுப்பிக் கொண்டே யிருந்தார்கள்.

பெரிய பந்தல் போட்டு தினசரி போராட்ட வீரர் கள் முகாம் செய்திருந்த வீட்டில் 200-300 பேர் சாப்பிடு வார்கள். தேங்காயும் மற்ற காய்கறிகளும் மலை மலையாகக் குவிந்து கிடக்கும். பெரிய கல்யாணவீடு மாதிரி காரியங்கள் நடைபெறும்!

**பார்ப்பனர் நடுங்கி விட்டனர்.**

திரு. இராசகோபாலாச்சாரியார் எனக்குக் கடிதம் எழுதினார். நீ ஏன் நம்நாட்டை விட்டு விட்டு இன் னொரு நாட்டிலே போய் ரகளை செய்கிறாய்? அது சரியல்ல, அதை விட்டுவிட்டு நீ இங்கு வந்து விட்டுவிட் டுச்சென்ற வேலைகளைக் கவனி என்று எழுதினார். அப்போது இருந்த எஸ் சீனிவாசய்யங்காரும் இப்படித் தான் என்னை வைக்கத்திற்கு வந்தே அழைத்தார், வரச்சொன்னார். அதே மாதிரி பத்திரிகையிலேயும் எழுதினார்கள். ஆனால் இதற்குள் சத்தியாக்கிரக ஆசிரமத்தில் 1000 பேருக்குமேல் சேர்ந்தார்கள். தினமும் ஊர் முழுவதும் சத்தியாக்கிரக பஜனையும் தொண்டர்கள் ஊர்வலமும் நடந்தது உணர்ச்சி வலுத்து விட்டது.

**பஞ்சாபியர் ஆதரவு.**

பஞ்சாபில் சுவாமி சிரத்தானந்தா என்பவர் ஒரு அப்பீல் போட்டார். அதன் பிரகாரம் பஞ்சாபிலே யிருந்து சீக்கியர்கள் 20-30 ஆட்களையும் இரண்டா யிரம் ரூபாயும் கையிலெடுத்துக் கொண்டு நேரே வைக் கத்துக்கு வந்தார்கள் தாங்கள் சாப்பாட்டுச் செலவை ஏற்றுக்கொள்ளும் ஆதரவு தருவதற்காக. உடனே இங்கிருந்த பார்ப்பனர்கள் எல்லாம் சீக்கியர்கள் வந்து இந்து மதத்திற்கு எதிராகப் போர் தொடுக்கிறார்கள் என்றெல்லாம் காந்திக்கு எழுதினார்கள்.

**காந்தியார் எதிர்த்தது.**

உடனே அதன்பேரில் காந்தியார் துலுக்கன் கிறிஸ் துவன் சீக்கியன் ஆகிய பிறமதக்காரன் எவனும் இதில் கலந்து கொள்ளக்கூடாது என்று எழுதிவிட்டார்கள்.

காந்தி எழுதினவுடனே இதில் கலந்திருந்த சீக்கி யன், சாயபு, கிருஸ்துவன் எல்லாம் போய் விட்டார்கள். அதுபோலவே தீவிரமாக இதில் ஈடுபட்டு முன்னோடி யாக உழைத்த காலஞ்சென்ற ஜோசஃப் ஜார்ஜுக்கும் இராஜகோபாலாச்சாரியார் கடிதம் எழுதினார். "இந்து மதசார்புள்ள இந்தக்காரியத்தில் நீ சேர்ந்திருப்பது தப்பு" என்றார்.

**போரை நீடிக்க எங்கள் உறுதி**

அதை ஜோசஃப் ஜார்ஜ் அவர்கள் லட்சியம் பண் ணாமல் திருப்பி எழுதினார். "நான் என் சுயமரியாதை யை விட்டு விட்டு இருக்கமாட்டேன். வேண்டுமானால் என்னை விலக்கி விடுங்கள்" என்றார். தற்போதைய நாகர்கோவில் பயோனீர் டிரான்ஸ்போர்ட்டைச் சேர்ந்த

சேவு என்பவரும், அண்மையில் காலஞ்சென்ற டாக்டர் எம். இ. நாயுடு(திரு-எம். எம்பெருமாள் நாயுடு அவர்கள் இந்தப் பேச்சுக்கு முதல் நாள் இரவு நாகர்கோவிலில் காலமானார். பிறகு தந்தை பெரியார் சென்று துக்கம் விசாரித்தார் என்பதை வாசகர்கட்கு நினைவூட்டு கிறோம் ) அவர்களும் என்னுடனேயே இருந்து தொடர்ந்து நடத்துவது என்று முடிவு செய்தார்கள். அவர்கள் இதை விட்டுப்போகமாட்டேன் என்று உறுதி யாகத் தெரிவித்து விட்டார்கள் என்றாலும், காந்தி சத்தியாக்கிரகத்திற்கு விரோதமாக எழுதி பணத் தையும ஆளையும் தடுத்து விடுவாரோ என்று சிலர் பயப்பட்டார்கள்.

**காந்தியார் எதிர்த்தும் போர் தொடர்ந்தது.**

அந்தசமயம் சாமி சித்தானந்தா அவர்கள் வைக்கம் வந்து தான் பணத்திற்கு வகை செய்வதாகச் சொன் னார். பிறகு காந்தி கட்டளைக்கு விரோதமாகவே சத்தியாக்கிரகம் நடந்து வந்தது.

இதற்கிடையிலே நடந்த ஒரு நிகழ்ச்சியும் கவனிக் கத்தக்கது. எங்கள் போராட்டத்திற்கு பெரிய மரியா தையையும் செல்வாக்கையும் தேடிக்கொடுத்துவிட்டது. இந்த காந்தி கட்டளை இந்த சமயத்தில் என்னை மறு படியும் பிடித்து 6 மாதக் கடினக்காவல் விதித்து ஜெயிலில் போட்டு விட்டார்கள். பிறகு சத்தியாக்கிர கத்தை நிறுத்துவதற்காகவும், எங்களை அழிப்பதற் காகவும் என்று நான் ஜெயிலிலே இருக்கிற சமயத்தில் இந்த நம்பூதிரி பார்ப்பனர்களும் சில வைதீகர்களும் சேர்ந்துக் கொண்டு சத்ருசங்கார யாகம் என்ற ஒன்றை வெகு தடபுடலாக ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து நடத்தினார்கள். ஒரு நாள் நடுச்சாமத்தில் தொடர்ந்து வேட்டுச்சத்தம் கேட்டது. நான் ஜெயிலில்

விழித்துக்கொண்டிருந்தேன் நேராந்து வந்தவனைப் பார்த்துக் கேட்டேன், என்ன சேதி இப்படி வெடிச் சத்தம் கேட்கிறது? இந்தப்பக்கம் ஏதாவது பெரிய திருவிழா நடக்கிறதா? என்று கேட்டேன். அதற்கு அவன் சொன்னான் "மகா ராஜாவுக்கு உடம்பு சவுக்கிய மில்லாமல் இருந்து மகாராஜா நேற்று இராத்திரி திருநாடு எழுந்து விட்டார்" என்றான்.

அதாவது இராஜா செத்துப்போனார் என்று சொன்னான். அவ்வளவுதான் மகாராஜா செத்தார் என்றவுடன் எங்களுக்கு ஜெயிலுக்குள்ளாகவே ரொம்ப பெருமை வந்து விட்டது. அவர்கள் பண்ணிய யாகம் அங்கேயே திருப்பி மகாராஜாவைக் கொன்றுவிட்டது என்றும் அந்த யாகம் சத்தியாக்கிரகக்காரர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை என்றும் மக்களிடையே இது ஒரு தனி மதிப்பை ஏற்படுத்திவிட்டது. அதன் பிறகு அரசாங்கம் எங்களையெல்லாம் ராஜாவின் கருமாதியை முன்னிட்டு விடுதலை செய்தனர். எதிரி கள் குரலும் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கிவர ஆரம்பித்தது.

**இராணியின் ராஜிமுயற்சியும் பார்ப்பனர் சூதும்**

இராணியும் கூப்பிட்டு எங்களோடு ராஜி பண்ணி ஒரு உடன்பாட்டுக்கு வர விருப்பம் தெரிவித்தவுடன் அப்போது சமஸ்தானத்தில் திவானாக இருந்த ஒரு பார்ப்பான் என்னிடத்தில் நேரே இராணி பேசக்கூடாது என்று கருதி திரு. இராசகோபாலாச்சாரிக்குக் கடிதம் எழுதினார். இராசகோபாலாச்சாரியும் எங்கே என்னி டத்தில் இராணி பேசி உடன்பாட்டிற்கு வந்தால் எனக்கு மரியாதையும் புகழும் வந்துவிடுமே! அந்த மரியாதை வரக்கூடாது என்று கருதி, இதை காந்தியா ருக்கே அந்த வாய்ப்பு அளித்து காந்தியின் மூலமே

காரியம் நடந்ததாக உலகுக்குக் காட்டவேண்டுமென்று தந்திரம் செய்து காந்திக்குக் கடிதம் எழுதினார். எனக்கும் அதைப்பற்றிக் கவலையில்லை எப்படியாவது காரியம் வெற்றியானால் போதும், நமக்கு பேரும் புகழும் வருவது முக்கியமல்ல என்ற கருத்தில் நானும் ஒப்புக்கொண்டேன்.

### சமரசப் பேச்சு

காந்தியும் புறப்பட்டு வந்தார் இராணியோடு காந்தி பேசினார் (இப்படி இந்த சத்தியாக்கிரகம் நல்லபடி வேரூன்றி வெற்றி நிலைக்கு வந்தவுடன் பார்ப்பனர்கள் காந்தியை இதில் புகுத்தினார்கள்)

இராணி காந்தியோடு பேசியபோது இராணி தெரிவித்தார்கள் 'நாங்கள் ரோடுகளைத் திறந்து விட்டுவிடுகிறோம். ஆனால் அதை விட்டவுடன் நாயக்கர் கோயிலுக்குள் போக உரிமைவேண்டும் என்று கேட்டுரகளை செய்தால் என்ன செய்வது? 'அதுதான் தயங்குகிறோம்' என்றார்கள். உடனே காந்தி டீ பியில் தங்கி இருந்த என்னிடத்தில் வந்து இராணி சொன்னதைச்சொல்லி "என்ன சொல்லுகிறாய்? இதை ஒப்புக்கொண்டு விடுவது நல்லது" என்றார். நான் சொன்னேன் "Public ரோடு திறந்து விடுவது சரி ஆனால் அதை வைத்துக்கொண்டு கோயிலைத் திறந்துவிடும்படி கேட்கமாட்டோம் என்று எப்படி நாம் உறுதியளிப்பது? கோயில் பிரவேசம் என்பது காங்கிரசின் இலட்சியமாக இல்லாவிட்டாலும், எனது இலட்சியம் அதுதானே (கோயில் நுழைவு) அதை எப்படி விட்டுக் கொடுக்க முடியும்? வேண்டுமானால் இராணிக்கு ஒரு வார்த்தை சொல்லுங்கள் "இப்போதைக்கு இதுமாதிரி கிளர்ச்சி எதுவுமிருக்காது. கொஞ்சநாள் அதுபற்றி மக்களுக்கு விளங்கும்படி பிரச்சாரம் செய்து கலவரத்திற்கு இட-

யிருக்காது என்று கண்டால்தான் கிளர்ச்சி ஆரம்பிக்கப் படலாம்'' என்று சொல்லுங்கள் என்று சொன்னேன்.

**போராட்ட வெற்றி**

அந்த காந்தி இராணியிடம் சொன்னவுடன் இராணியார் ரோட்டில் யார் வேண்டுமானாலும் நடந்து செல்லலாம் என்று சொல்லி பொது ரோடாக ஆக்கி னார்கள்.

**கோயில் நுழைவுப்போர்**

அதன் பிறகு சிலநாள் பொறுத்து ஈரோட்டிலே நான் தேவஸ்தானக் கமிட்டித் தலைவனாக இருந்த போது நான் ஊரிலில்லாத ஒருநாளில் தோழர்கள் பொன்னம்பலமும், குருசாமியும், இப்போது காங்கிர சுக்காரராக இருக்கும் ஈசுவரனும் எங்கள் ஆஃபீசிலே வேலை செய்கிற இரு ஆதிதிராவிடரை விபூதி பூசச் சொல்லிப் பூசி கோயில் உள்ளே அழைத்துச்சென்ற வுடன் பக்தர்களெல்லாம் சத்தம் போட்டு கோயிலுக்குள் இவர்கள் உள்ளே சென்றதும் இவர்களை உள்ளே விட்டு வெளிக்கதவுகளைப் பூட்டி விட்டார்கள். அது குறித்துக் கேசும் போட்டார்கள்! "சாமி தீட்டாய்ப் போய்ச்சு'' என்று வாதாடி தண்டிக்கச் செய்தார்கள்! பிறகு ஹைக்கோர்ட்டிலே அதற்கு எதிராகத் தீர்ப்புக் கிடைத்தது (அது வெள்ளையர் ஆட்சிக் காலம்)

**சுசீந்திரத்தில் முதல் போராட்டம்**

ஆனால் இந்தியாவிலேயே முதன் முதலில் சுசீந் திரம் கோயிலில்தான் கோயில் நுழைவுக்கென்று கிளர்ச்சி துவக்கப்பட்டது. அந்தக்காலத்தில் கோட் டயத்திலே என் தலைமையில் ஒரு சுயமரியாதை

மாநாடு போட்டார்கள். அதில் சாதி ஒழிப்பு சம்பந்த மாகவும் கோயில் நுழைவு உரிமை சம்பந்தமாகவும் பலவித தீர்மானங்கலையும் போட்டார்கள்.

அடுத்து எர்ணாகுளத்தில் ஒரு மாநாடு என் தலைமையில் கூடப்பட்டது. அதில் "சாதி ஒழிப்புக்காக சாதியில்லாத மதமாகிய இஸ்லாம் மதத்தில் இந்துக்கள் சேர்ந்து விடுவது" என்று தீர்மானம் நிறைவேற்றக் கொண்டுவரப்பட்டது! சில செல்வாக்கு உட்பட்டவர்கள் கிருஸ்துவ மதத்தில் சேருவது என்று திருத்தம் கொண்டு வந்தார்கள்! மாஜி மந்திரி அய்யப்பன் அவர்கள் இஸ்லாம் மதத்திற்குப் போய்ச்சேருவது என்பதை இஷ்டப்பட்ட மதத்தில் சேர்ந்துக்கொள்ளலாம் என்று திருத்திப் போடவேண்டுமென்று சொல்லி ஏகமனதாய் தீர்மானம் நிறைவேறச் செய்தார்.

**'இந்து' மாயை ஒழிந்தது**

இஸ்லாத்தில் சேருவது என்ற தீர்மானம் வந்த அன்றைக்கே ஒரு அய்ம்பது பேர்கள்போல முஸ்லிமாகி விட்டார்கள். பிறகு வெளியிலும் பலர் மதம் மாறி விட்டார்கள். இது ஒரு பெரிய கலக்குக் கலக்கிவிட்டது.

**மதச்சண்டை**

இப்படி முஸ்லிமான ஒரு ஆள் (அவர் புலையர் வகுப்பைச் சேர்ந்தவர்) ஆலப்புழையில் ஒரு நாயர் கடையில் கடைமீது ஏறி சாமான் கேட்டார் என்பதை வைத்துக்கொண்டு ஓங்கி அடித்தான்! அவர் சத்தம் போடவே நாயர்களும் ஓடிவந்தார்கள் சாயபுக்களும் ஓடிவந்து பலமான அடிதடி சண்டை நடந்தது ஒருவர் செத்துவிட்டார். இந்த மாதிரி இந்து முஸ்லிம் கலவரம் வலுத்தவுடன் மேலே எல்லாம் தந்தி கொடுத்தார்கள்.

அப்போது திவானாக இருந்த சர். சி. பி. இராமசாமி அய்யர் இதை இந்து முஸ்லிம் சச்சரவு என்று சொல்லாமல் முதலாளி-தொழிலாளி சண்டை என்று அடக்கி விட்டார்கள்.

## கோவில் நுழைவிலும் வெற்றி !

பிறகு இராஜாவுக்கு சி. பி இ. சொன்னார் 'ஈழவர் புலையர்களெல்லோரும் துலுக்கராக மாறிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு மருந்து கோயிலைத் திறந்து விட்டுவிட வேண்டியதுதான்' என்று கூறினார். அப்போது ஆயுசு ஓமம் நடந்துகொண்டிருக்கிறது. இராஜாவும் இதைக்கேட்டு ஒப்புக்கொண்டு பிறந்த நாளுக்கு ஏதாவது நல்ல சேதி வருஷா வருஷம் சொல்லுவதில் அந்த வருஷத்து இராஜா பிறந்தநாள் செய்தியாக **'கோயில் எல்லா இந்துக்களுக்கும் திறந்துவிடப்படும்' என்று அறிவித்தார் இப்படிததான் ஆலயப்பிரவேச உரிமை கிடைததது.**

## காந்திக்குப் புத்தி வந்தது

இதற்கப்புறம்தான் ஆச்சாரியார் முழங்கினார். அதற்குப் பிறகுதான் காந்தியாரும் மற்றவர்களும் மாறினார்கள். இந்தக் காரியமெல்லாம் காந்தியால்தான் நடந்தது என்பதெல்லாம் வெறும் பித்தலாட்டமாகும். காந்தி தீண்டாதார் என்ற மக்களுக்கும் ஆதிதிராவிட மக்களுக்கும் ஒடிந்த ஊசியளவுக்குக்கூட அவர்களது இழிவு நீங்கப்பாடுபடவில்லை என்பது டாக்டர் அம்பேத்கார் எழுதியுள்ள "காங்கிரசும் காந்தியும் தீண்டாதவர்களுக்குச் செய்தது என்ன ?" (What congress and Gandhi have done to untouchables) என்ற புத்தகத்தைப்பார்த்தால் தெரியும்.

## குருகுலப் போராட்டம்

நான் காங்கிரசில் இருக்கும்போது காங்கிரசு கட்சியின் சார்பாக திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள சேர்மாதேவியில் ஒரு குருகுலம் ஆரம்பித்தார்கள். நான் அப்போது காங்கிரஸ் கமிட்டிக்குக் காரியதரிசியாக இருந்தேன். அப்போது அக்குருகுலத்திற்கு த. நா. காங்கிரசு 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க சம்மதித்து ரூ. 5000 கொடுத்து விட்டேன். அதில் முழுப்பொறுப்பையும் வி. வி. எஸ். அய்யர் என்பவர் ஏற்றிருந்தார். பணம் பெற்ற ஒரு மாதம் பொறுத்து மறுபடியும் ரூ. 5000 கேட்டார். ஆனால் அந்த குருகுலத்தில் பார்ப்பாரப் பசங்களுக்குத் தனி இடத்தில் உள்ளே வைத்து சாப்பாடு போடுவார்கள். நம் பசங்களுக்கு வெளியே வைத்து சாப்பாடு. அதுவும் பார்ப்பனர்களுக்கு உப்புமா; நம் பிள்ளைகளுக்கு பழைய சோறு அல்லது பழங்கஞ்சி போன்றவைகளைப் போட்டனர். இதை திரு ஓமந்தூர் இராமசாமியாரின் மகன் (அதில் படித்த மாணவர்களில் அவன் ஒருவன்) மனம் வேதனைப்பட்டு என்னிடம் தெரிவித்தான். பிறகு நான் இராஜகோபாலாச்ச்ரரியாரிடம் தெரிவித்தேன். பிறகு அவர் வி. வி. எஸ். அய்யரிடம் கேட்டபோது 'அது உண்மைதான். அப்படித்தான் அது இருக்கும்; காரணம் அது ஆரம்பித்த இடம் வைதீகர்கள் நிறைந்த இடம் அதில் மாற்றம் இப்போது செய்ய முடியாது. சில நாளில் செய்கிறேன் என்று கூறினார்' அப்படியானால் அந்த மாற்றம் ஏற்பட்ட பிறகு பாக்கி ரூ. 5000 தரப்படும் என்று சொன்னேன். அய்யர் 'இதுதான் தேச சேவையா? என்று என்னைக் கேட்டார்' 'நான் இதுதான் தேசியமா என்று கேட்டேன்' **அதுமுதல் காங்கிரசில் பார்ப்பனர் தமிழர் என்ற கட்சி ஏற்பட்டு விட்டது.**

**காங்கிரசுக்குள் சாதி வேற்றுமை**

காங்கிரசுக் கட்சி மாநாடுகளில் இன்றைக்கும் பார்ப்பான் தான் சமையல் செய்வான். ஆனால் அப்போதே நாங்கள் சுயமரியாதை இயக்க ஜஸ்டிஸ்கட்சி மாநாடுகளில் பார்ப்பானை அழைக்காமல் விருதுநகர் நாடார்களை வைத்து சமையல் செய்வோம். இதை யெல்லாம் இப்படி படிப்படியாகப் பெருங்கிளர்ச்சிகள் செய்வதன் மூலம் தான் சமுதாயத்தில் ஒரு சிறுமாறுதலாவது அடைய முடிந்தது.

**மற்றபடி இன்றைய சிறுமாறுதலுக்குக் காரணம் காங்கிரசோ காந்தியோ, எந்தப் பார்ப்பனரோ அல்ல வென்பது இதன் மூலம் நன்றாகத் தெரியும்.**

**எங்களைத்தவிர யார் கேட்கிறார்கள் ?**

இன்றைக்கும் நாங்கள் தானே கேட்கிறோம் "எதற்காக சோம்பேறிப் பார்ப்பான் மேல்சாதியாக இருக்க வேண்டும்? நாம் எதற்குக் கீழ்சாதியாக சூத்திரனாக இருக்கவேண்டும். இப்படி நம்மை சூத்திரனாக்கும் ஒரு கடவுள் நமக்கு எதற்காக இருக்க வேண்டும்" என்றெல்லாம் ?

**சாதியைக்காக்க உரிமைச் சட்டமா ?**

ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து மனிதனையே கடிப்பது போன்று இன்று மூலாதாரச் சட்டம் என்று சட்டத்திலேயே சாதியைப் பாதுகாப்பதற்கு வழி ஏற்படுத்தி விட்டார்கள் ? அரசாங்கத்தைப் பார்ப்பான் கையில் வைத்துக் கொண்டு "நீங்கள்" சூத்திரனாகத் தான் இருக்கவேண்டும் இல்லையேல் ஜெயிலில் இருக்க வேண்டும் அல்லது நாட்டைவிட்டே வெளியே போக

வேண்டும் என்று தைரியமாகச் சொல்லுகிறான், அதுவும் இங்கு வந்து சொல்லிவிட்டுப்போகிறான், வெளிநாட்டுப் பார்ப்பான். இந்த அக்கிரமம் ஏன் என்று என்னைத் தவிர என் கழகத்தைத் தவிர எவனாவது கேட்கிறானா?

## நம்மை மதம் இழிவுபடுத்ினால் அதை ஒழிக்கவேண்டாமா?

இந்து மதப்படி நாம் சூத்திரர்கள் என்றால் மதத்தை ஒழிப்பது என்பது அவசியமா? அல்லவா? மற்றவனைப் போல ஏமாற்றி வஞ்சித்து பித்தலாட்டமாகப் பேசிக்கொண்டு ஓட்டு வாங்கி வாழும் நிலையில் இருப்பவர்களல்ல நாங்கள். காந்திமகான் காட்டியவழி என்று சொல்லி ஏய்த்து வயிறு வளர்த்து பதவியில் போய் அட்டைபோல ஒட்டிக்கொண்டு வாழும் மானங்கெட்டக் கூட்டத்தைச் சார்ந்தவனல்ல நான். பொது வாழ்க்கையை வைத்து அதன் மூலம் வயிறு கழுவ வேண்டும் என்ற நிலையில் இல்லாது எங்கள் வீட்டுச் சோற்றைத் தின்றுக்கொண்டு பாடுபடுபவர்கள் நாங்கள்! எதற்காக நாங்கள் எங்கள் பணத்தை, எங்கள் உழைப்பை, எங்கள் நேரத்தை இப்படி செலவு செய்துக் கொண்டு இந்தக் காரியத்தைத் தலைமேல் தூக்கிப் போட்டுக்கொண்டு பாடுபடவேண்டும்? நீங்கள் சிந்திக்க வேண்டும்

## அறிவாளர் உலகின் நடுவே நாம் காட்டுமிராண்டியாவதா?

1938-ம் வருடக் கடைசியில் உலகையெல்லாம் அறிவு ஆள்கிற இக்காலத்திலேயே இங்கே நாம் மதத்திலே காட்டுமிராண்டிகள், கடவுள் துறையிலே காட்டுமிராண்டிகள், சாஸ்திரங்கள் எழுதிக்கொண்டாடுவதில் காட்டுமிராண்டிகள் அரசாங்கம் காட்டுமிராண்டிப்

பசங்கள் கையில், இதை ஏன் என்று கேட்க எங்களைத் தவிர வேறு யாரும் கிடைக்கவில்லையே !

**சந்ததிகளையாவது விடுவிப்போம்**

நாம்தான் இப்படி இழிசாதியாக பார்ப்பானுடைய வைப்பாட்டி மகனாக இருந்துவிட்டோம் என்றால் நம் மகன் ஏன் இப்படி இருக்கவேண்டும் ? அவன் மகன் ஏன் இப்படியே இந்த பிறவி இழிவிலிருந்து நீங்காது இருக்கவேண்டும் ? நீ ஏன் இழிவுசாதி என்று நான் பலகாலம் சொல்லிவிட்டேன் மூக்கு நாறிப்போச்சு இந்த நாட்டிலே அரசியல் பேரால் பிழைக்கிற எவனுக்கும் அதுபற்றிய கவலை இல்லையே ! பார்ப்பான் சொல்லுகிறமாதிரி தானே இவர்களும் இருக்கிறார்கள்.

முன்பு நான் வைக்கம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்த நேரத்தில் நிலம்பூர் இராஜாவுடைய (ஜமீன்தார்) மருமகன் திரு. சாத்துக்குட்டி என்பவர் என்னிடம் வந்து பேசிக்கொண்டிருப்பார். அவர் பி. ஏ. படித்தவர்தான். அவர் யாரிடத்தில் பேசிக் கொண்டிருந்தாலும் 'சாமி சாமி' என்றுதான் அழைப்பார். "நாயக்கர்சாமி என்னை என்ன இந்த நாயர் பசங்களாட்டப் நினைத்துக் கொண்டீர்களா என்ன ? நான் இன்ன வீட்டு நம்பூதிரிப் பார்ப்பானுக்குப் பிறந்தவனாக்கும்" என்று பெருமையாகக் கூறிக்கொள்ளுவார். நேற்றுவரை இதைத் தானே நம் மக்கள் பெருமையாக நினைத்துக் கொண்டிருந்தார்கள் ! இதை இழிவு அவமானம் என்று எடுத்துக்கூற எவனும் இல்லையே ஏன் ?

**மோட்சத்தின் பேரால் மானங்கெட்ட நடத்தை**

ந ஆழ்வார்கள் எனப்படுபவனெல்லாம் தன் பெண்டாட்டிகளை கண்டவனுக்கு விட்டுக்கொடுத்து மோட்சத்திற்குப் போய் இருக்கிறான். 'பக்தவிஜயம்'

என்று வரும் ஆழ்வார்கள் கதையில் ஒரு சூத்திர ஆழ்வார் தனது மனைவியை வியாபாரத்துக்கு விட்டுக் கொடுத்து மேல் லோகத்திற்குப் போனான் என்று எழுதி வைத்திருக்கிறான் நாயன் மார்களிலும் பார்ப்பானுக்குப் பெண்டாட்டியைக் கொடுத்து இருக்கிறார்கள்! இன்னும் அந்த மாதிரி அதைத் தைரியமாகப் பிரச்சாரம் செய்கிறான். இதை எடுத்துச் சொன்னால் புராணங்களைத் திட்டுகிறான் என்று சொல்லுவதா? இது மாதிரி ஆபாசக் குப்பைகளாக ஒழுக்கத்தைக் கெடுக்கும் புராணங்களைப்பற்றி வேறு என்ன சொல்ல முடியும்?

## பார்ப்பானுக்கு ஆட்சி தந்து காந்தி செய்த மோசம்

இவ்வளவுக்கும் வசதியாக ஆட்சியைப் பார்ப்பனர்களே கையில் வைத்துக்கொண்டார்கள். இந்த காந்தி அவர்கள் கையிலே ஆட்சியை வாங்கிக்கொடுத்து நாம் என்றென்றும் மீளமுடியாதபடி சூழ்ச்சி பண்ணிவிட்டு பார்ப்பான்கிட்டே அதற்குரிய கூலியைப் பெற்றுக் கொண்டு விட்டார். அந்தப்பயல்களே எல்லாவற்றையும் கையிலே வைத்துக் கொண்டார்கள். இன்றைக்குப் பாருங்களேன் அவன்தான் பிரசிடெண்டு. அவன்தான் வைஸ் பிரசிடெண்டு. அவன்தான் பிரதமர். அவன்தான் டெப்டி பிரதமர். பார்லிமெண்டுக்குத் தலைவர் அவன்தான்.

இவ்வளவும் போதாது என்று சாதி ஒழியணும் என்றால் 3-வருஷம் என்று தண்டித்து ஜெயிலிலே போட்டும் படுகொலை செய்கிறான். இதைப்பற்றி யார் கவலைப்படுகிறார்கள்?

## பதவி ஆசைக்காரன் போக்கு

மற்றவர்களெல்லாம் இந்த அரசாங்கம் இருக்கணும் இந்த அரசாங்கத்தால் காப்பாற்றப்படும் சாதி,

சாதிக்கு ஆதாரமான சாஸ்திர புராணங்கள், மதம் இருக்கணும் என்றுதான் பிரச்சாரம் பண்ணி வாழ வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

ஓட்டு வாங்கிப் பிழைக்க எண்ணும் எவனும் எதற்காக சாதி கடவுள், மதம், இந்த அரசாங்கம்தான் என்று கேட்கத் துணியமாட்டானே.

முன்பாவது நம்மை மனிதன் என்று சரி சமத்துவமாகக் கருதி நடத்திய வெள்ளைக்கார அரசாங்கம் இருந்தது. இப்போ நடக்கிற அரசாங்கம் நம்மையெல்லாம் தேவடியாள் மகன் என்றழைக்கிற பார்ப்பான் கிட்டே அல்லவா அரசாங்கம் பாட்டிக்கொண்டு இருக்கிறது. அதனால்தான் சட்டத்திலேயே சாதி ஒழியக் கூடாது என்று பத்திரம் செய்து வைத்துக்கொண்டு இதை மாற்று என்று கேட்கிறவர்களுக்கு 3 வருஷம் என்று ஆக்கி வைத்திருக்கிறான்.

**சாதி விடாத நோய் ஆகும்**

இந்த சாதி நோய் என்பது ஒரு நீண்ட நாளாக நம்மை விடாத ஒரு நோயாகும். Chronic Disease என்பார்களே அதுபோல! சிரங்குக்குப் போடும் மருந்தையே புற்றுநோய்க்கும் போட முடியுமா? தேவையானால் அது பிடித்திருக்கும் பாகத்தையே அறுத்தல்லவா எறியவேண்டும். நோய்க்குத் தகுந்த வைத்தியம் தானே பண்ணவேண்டும். நாம் 3000 வருஷமாக தேவடியாமக்கள், இந்துலாவின்படியேயும் நாம் சூத்திரர்கள், அரசியல் சட்டத்திலே சாதிக்குக் கடுமையான பாதுகாப்பு!

**கடுமையான சிகிச்சை தேவை**

இந்தக்கொடுமை ஒழியணும், இழிவு நீங்கணும் என்றால் அது ரொம்பவும் கஷ்டமான வேலைதான்.

அதன் வேரில் நெருப்புப் பொறி பறக்கும்படி செய்து வெந்நீர் ஊற்ற வேணும். சும்மா பூச்சுப் பிடியில் சாதி ஒழிந்து விடுமா என்ன ?

**சட்டசபைக்காரனால் எதும் செய்ய முடியாது**

தமிழ் நாட்டிலேயே ஏன் இந்தியாவிலேயே என்று கூடச் சொல்லுவேன் ஓட்டு வேண்டாத எங்களைத் தவிர வேறு எவனும் இவ்வளவு தைரியமாக எடுத்துச் சொல்ல முடியாதே ! சொல்லத் துணிவு எவனுக்கும் கிடையாது. இந்தக் கருத்துக்களை ஜீரணிக்கும் சக்தியே எவனுக்கும் கிடையாதே ! உண்மையாகப் பொதுமக்களுக்குத் தொண்டு புரியணும் என்பவரால் தான் முடியும்.. விரலை விட்டுமே யார் என்ன செய் தார்கள் ? சட்டசபைக்குப் போகிறேன் என்று சொன் னவர்கள்தான் என்ன பண்ண முடிந்தது ? என்ன பண்ண முடியும் ?

சட்டசபைக்குப் போகிறதனால் ஏதாவது செய்ய முடியும் என்றால், தந்தி மூலம் இங்கிருந்தபடியே பதவி வாங்க முடியுமே !

கொஞ்ச நாளைக்கு முன்புகூட நேரு சட்டசபை யைப்பற்றிக் கண்டித்தார்; சன்னியாசம் வாங்கப்போவ தாகக்கூட மிரட்டினார். கடைசியில் என்ன ஆச்சு ? மூச்சுப்பேச்சில்லாமல் தான் சொன்னதை மாற்றிக் கொண்டார் ! அந்தக் காலத்தில் காந்தியும் இதனால் தானே புகழ் பெற்றார்.

**கம்யூனிஸ்டுகளும் கண்ணீர்த்துளிகளும்**

இந்தக் கம்யூனிஸ்டுகளைத்தான் எடுத்துக்கொள் ளுங்களேன். தோழர் ஜீவானந்தம் எங்களோடு இருந்த

வரை சட்டசபைக்குப் போவதைக் கண்டித்துப் பேசி வந்தவர்தானே.

இன்றைக்குச் சட்டசபைக்குப் போயிருக்கிற இந்த கண்ணீர்த்துளிகளும் எங்களோடு இருந்தவரை சட்ட சபை நுழைவைக் கண்டித்து எழுதி பேசி வந்தவர்கள் தானே? நேரு, இராசேந்திரபிரசாத் போன்றவர்களும் இதைத்தானே கூறிவந்தார்கள். இன்றைக்கு வாய்ப்பு இருக்கிறது என்றவுடன் ஒவ்வொருத்தன் நாக்கிலும் தண்ணீர் ஊறுகிறது! முன்பு சொன்னதெல்லாம் மறந்து விடுகிறான். எதைச் சொல்லியாவது எந்தப் பித்தலாட்டம் செய்தாவது சட்டசபைக்குப் போனால் போதும் என்று நினைக்கிறான்! அப்புறம் யாரைக் காட்டிக் கொடுத்தாவது தான் முன்னுக்கு வந்தால் போதும் என்று நினைக்கிறான். நம் இனத்துக்கு நீண்ட நாளாக இருந்துவரும் இழிவைப்பற்றிக் கவலை கொள்வதே கிடையாது.

இந்த நாட்டை 3 பேய்களும் 5 நோய்களும் அழுத்தமாகப் பிடித்திருக்கின்றன. இல்லாததை இருப்பதாக நினைத்துக் கொள்ளுவதுதான் பேய் என்று சொல்வதாகும்.

1. கடவுள், 2 சாதி, 3. ஜனநாயகம் என்ற மூன்றும் முப்பேய்கள். நம்மைப் பிடித்துள்ள கடுமையான நோய்கள் அய்ந்து அவை 1. பார்ப்பான், 2. பத்திரிகை, 3. அரசியல் கட்சிகள், 4. சட்டசபை, 5. சினிமா என்றும், இவைகள் க்ஷயம், புற்றுநோய், பெருநோய், மலேரியா போல் ஆளைப் பிடித்து அரித்துத்தின்கிற கிருமிகளைப் போல் கொன்று கொண்டு இருக்கின்றன. மனித சமுதாயம் உருப்பட வேண்டுமானால் இவைகள் அடியோடு ஒழிக்கப்படவேண்டும்.

# குடிஅரசு, பகுத்தறிவு வெளியீடுகள்

| | | ரூ | காசு |
|---|---|---|---|
| 1. | தமிழர் தலைவர் | 2 | 50 |
| 2 | பெரியார் இராமசாமி | 1 | 25 |
| 3 | ஞானசூரியன் | 0 | 75 |
| 5. | இராமாயண பாத்திரங்கள் | 0 | 75 |
| 4. | நீதி கெட்டது யாரால (முதல் பாகம்) | 0 | 75 |
| 6. | அய்க்கோர்ட்டு நீதிப்போக்கு (2ம் பாகம்) | 1 | 25 |
| 7. | புரட்டு இமாலயப் புரட்டு | 1 | 00 |
| 8. | இனிவரும் உலகம் | 0 | 15 |
| 9. | அறிவுச்சுடர் | 0 | 25 |
| 10. | பிரகிருதிவாதம் | 0 | 37 |
| 11 | மனுநீதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி | 0 | 15 |
| 12 | சோதிட ஆராய்ச்சி | 0 | 37 |
| 13 | வாழ்க்கைத் துணைநலம் (முதல் பாகம்) | 0 | 50 |
| 14 | தத்துவ விளக்கம் | 0 | 31 |
| 15. | தமிழும் தமிழ் இலக்கியமும் | 0 | 19 |
| 16 | ஆச்சாரியார் ஆட்சியின் கொடுமைகள் | 0 | 62 |
| 17. | காமராசர் ஆட்சியின் சாதனைகள் | 0 | 50 |
| 18. | தாய்ப்பால் பைத்தியம் | 0 | 10 |
| 19. | ஜனநாயகம் | 0 | 20 |
| 20 | சுதந்திரத் தமிழ்நாடு ஏன்? | 0 | 50 |
| 21. | சட்டசபையில் கண்ணீர்த்துளிகள் சாதித்ததென்ன? | 0 | 50 |
| 22 | பகுத்தறிவு அல்லது மரண சாசனம் 1ம் பாகம் | 0 | 37 |
| 23. | ,, 2ம் பாகம் | 0 | 37 |
| 24. | ,, 3ம் பாகம் | 0 | 37 |
| 25. | மொழியும் அறிவும் | 0 | 25 |
| 26. | மதப்புரட்சி | 0 | 40 |
| 27. | மதம் என்றால் என்ன? | 0 | 15 |
| 28. | முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை | 0 | 50 |
| 29. | மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன? | 0 | 25 |
| 30. | உண்மை இந்து மதம் எது? | 0 | 45 |
| 31. | கடவுள் | 0 | 37 |
| 32. | சாதியை ஒழிக்க வழி | 0 | 50 |
| 33. | பேய், பூதம், பிசாசு | 0 | 37 |
| 34. | இரண்டு வழிகள் | 0 | 25 |
| 35. | கைவல்யசாமியார் கட்டுரைகள் | 0 | 50 |
| 36. | கடவுளும் பிரபஞ்சமும் | 0 | 37 |
| 37. | நான் ஏன் கிருஸ்தவன் அல்ல? | 0 | 25 |
| 38. | கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? | 0 | 25 |